**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

வணிக வழக்கு எண்.38/2023 எச்.எம்.ஓ.பி.எண்.

எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **பி.வா.சா.2**-ன் வாக்குமூலம் 1989-ம் ஆண்டு 19-வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.K.P.இளவரசி, முதன்மை சார்பு நீதிபதி, ஈரோடு அவர்களால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாககிருஷ்ணன் | வட்டம் | : | |
| த/பெ | : | ராஜேந்திரன் | மாவட்டம் | : | |
| க/பெ | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**பி.வா.சா.2 : முதல் விசாரணை**:-

அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். பிரதிவாதி பக்தவசலம் எங்கள் வங்கியில் கணக்கு ஆரம்பித்த படிவம் எடுத்து வந்துள்ளேன். அவரது வங்கி கணக்கு எண்.036700050900455 மேற்படி வங்கி கணக்கு Over Draft கணக்காகும். **சா.சா.ஆ.1** ஆகும். காசோலை எண்.005569, 005566 ஆகிய காசோலைகளை 09.01.2012-ம் தேதியிலும், மற்ற காசோலைகள் 035429, 035402, 035428, 035467 ஆகிய காசோலைகளை 27.07.2012-ம் தேதியிலும் வழங்கப்பட்டது. **சா.சா.ஆ.2** ஆகும். அந்த வங்கி கணக்கு எண்.29.03.2016-ம் வருடம் முடிக்கப்பட்டது. அதன் பிறகு வரவு, செலவு எதுவும் இல்லை. 2012 முதல் 2016 வரையான வங்கி கணக்கு பட்டியல் **சா.சா.ஆ.3** ஆகும்.

**பி.வா.சா.2 : வாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் கடந்த ஒரு வருடமாக தமிழ்நாடு மெர்கன்டைன் வங்கியில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். வங்கியில் வங்கி கணக்கை முடிக்கும் போது, அவர் வங்கியிலிருந்து பெற்றிருந்த காசோலைகளை திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது வங்கியின் விதி ஆகும் என்றால், சரிதான். அதேபோல் பிரதிவாதி பக்தவசலம் எவ்வளவு காசோலைகளை திரும்ப ஒப்படைக்கவில்லை என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான்.